உ

# தீபத் திருநாளை விவேகமாகக் கொண்டாடுவோம்!

இருளை அகற்றி ஒளி காட்டுவது நெய் தீபம்! தீயவற்றை நீக்கி நல்லனவற்றை கூட்டுவது இதய தீபம்! அஞ்ஞானத்தை அகற்றி ஆன்மிகத்தை உணர்த்துவது ஆலய தீபம்! இந்த ஒட்டுமொத்த தீபச் சுடரின் தத்துவமே தீபத்திருநாள்!!

இறை வணக்கம், அன்பு பரிமாற்றம், அரவணைப்பு, மன்னிப்பு, விருந்தோம்பல் இவை அனைத்தும் தீபாவளி அன்று மிளிர்வதோடு நின்றுவிடாமல், ஆண்டு முழுதும் தொடர வேண்டும்.

தீபாவளித் திருநாளை கொண்டாடும் நாம், அதன் தன்மைகளை நன்குணர்ந்து கடைப்பிடிப்பது விவேகமகும். அதே வேளை சில வழிமுறைகளை அனுசரிப்பதும் அறிவுடமையாகும்.

குறிப்பாக இல்லத்தை அழகாய் அலங்கரிக்கலாம். ஆனால் ஆடம்பரம் ஆகாது. விருந்து அறுசுவையுடன் இருக்க வேண்டுமே ஒழிய அசைவம் இருக்க வேண்டிய அவசியம் கிடையாது. அதேபோல் மதுபானம் அருந்தும் பழக்கமுடையவர்கள் அதனை ஒதுக்கி வைக்க வேண்டும். (அல்லது குறைத்துக்கொள்ள வேண்டும்).

தீபாவளி அன்று நாம் உடுத்தும் புத்தாடைகளும் நமது பண்பாட்டை பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். வசதிக்காக, நவீனமய ஆடைகளை பிற நாட்களில் பயன்படுத்திக் கொள்ளலாம். திருநாள் அன்று வேண்டாம். அத்துடன் தீபாவளிக்கான செலவீனம் விரலுக்கு ஏற்ற வீக்கமாக இருத்தல் அவசியம். அதே வேளை தீப நன்னாளை நாம் கொண்டாடும் முறையும் நமது உயர்ந்த கலாச்சரத்தை மாசுபடுத்தாதிருக்க வேண்டும்.

அடுத்து- தீபாவளி திருநாள் ஒற்றுமைமையைப் போற்றக்கூடியதாகவும் இருத்தல் மேன்மை! சக இனங்களுக்கு இடையே நல்லுறவு, நல்லிணக்கம், நட்புணர்வு தொடர்ந்து பேணப்படவது மட்டுமல்ல, புதிக்கப்படுவதும், புதிய அறிமுகங்களை ஏற்படுத்திக் கொள்வதும் தர்மமாகும். ஏனனில் நாம் அனைவரும் இம்மண்ணின் பிள்ளைகள்.
இதுவே உண்மையான 'மலேசியத்துவம்'!

அனைவருக்கும் இனிய சுகமான தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

செனட்டர் டாக்டர் எஸ். இராமகிருஷ்ணன்